# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2287/28 - 2022 ජූලි මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.07.07

*2287/28 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ 24/51* (XII)

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 158 ஆம் பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின்கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2022, யூலை 05.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, மோட்டார் வாகன (பாதுகாப்பு தலைக்கவசங்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஏதேனும் வீதியின் மோட்டார் சைக்கிள் ஒன்றை ஓடுகின்ற அல்லது மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஏற்றிச் செல்லப்படுகின்ற ஆள் ஒவ்வொருவரும் கவச முகத்தகட்டுடன் கூடிய அல்லது கவசமுகத்தகடு இல்லாத பாதுகாப்புத் தலைக்கவசம் ஒன்றை அணிதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பாதுகாப்புத் தலைக்கவசம் -

   (அ) ஓடு, அதிர்ச்சியை உள்ளீர்க்கும் பகுதி நாடிப்பட்டி, வசதியான பாதுகாப்புத் திணிப்பு மற்றும் தலையை சுற்றிலும் பொருத்தப்படுகின்றதான பட்டி என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.


1A - PG 5885 — 506 (2022/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) (எஸ்எல்எஸ் 517 : 1994) வாகனப் பாவனையாளர்களுக்கான பாதுகாப்புத் தலைக்கவசங்களுக்கான இலங்கை நியம அளவுக்குறிப்பீட்டின் வகை (ஆ) ஆக வகுப்பாக்கஞ் செய்யப்பட்ட தலைக்கவசங்கள் தொடர்பான நியமங்களிற்கு அல்லது காலத்திற்குக்காலம் பாதுகாப்புத் தலைக்கவசங்களிற்கு ஏற்புடையற்பாலதாக இருக்கக்கூடியதான அத்தகைய நியமத்திற்கு இசைந்தொழுகுதல் வேண்டும். அத்தகைய பாதுகாப்புத் தலைக்கவசம் இலங்கைத் தர நியமங்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட எஸ்எல்எஸ் உற்பத்திப்பொருள் சான்றுப்படுத்துகைக் குறியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) அதனது வெளிமேற்பரப்பில் ஒளி பிரதிபலித்தலாகாது.

3. பாதுகாப்புத் தலைக்கவசத்தின் நாடிப்பட்டியானது அத்தலைக்கவசத்திற்கு நிரந்தரமாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் நாடிப்பட்டியின் நீளமானது சரிசெய்யக்கூடியதாகவும் பாதுகாப்பாகவும், வசதியாகவும் நாடிப்பட்டியினை பொருத்தக்கூடியதாகவும் விடுவிக்கக் கூடியதாகவும் தலைக் கவசத்தை அணிபவரை இயலச்செய்கின்றதான பொறிமுறை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. பாதுகாப்புத் தலைக்கவசம் ஒன்று கவசமுகத்தகடு ஒன்றுடன் இருக்குமிடத்து, அத்தகைய கவசமுகத்தகடானது -

(அ) பாதுகாப்புத் தலைக்கவசத்திற்கு பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்;

(ஆ) (i) அது நிறச்சாயமிடப்பட்ட அல்லது நிறப்பூச்சிடப்பட்ட மூலப்பொருளினால் ஆக்கப்பட்டிருப்பின்; அல்லது

(ii) அது தலைக்கவசத்தை அணிபவரின் சுற்றுப்புறப்பார்வைக்கு தடையாக இருப்பின்

அணிதலாகாது.

5. பாதுகாப்புத் தலைக்கவசமானது நாடிப்பாதுகாப்பொன்றைக் கொண்டிருக்கலாம் என்பதுடன் அத்தகைய நாடிப்பாதுகாப்பு இதற்கான அட்டவணையில் தரப்பட்டவாறு தலைக்கவசத்தை அணிபவரது பார்வையை தடைசெய்தலாகாது.

6. ஆளொருவர் -

(அ) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளிற்கு இசைந்தொழுகாமல் மோட்டார் சைக்கிள் ஒன்றை ஓடுகின்ற நோக்கத்திற்காக ஏதேனும் தலைக்கவசத்தை பயன்படுத்துதலோ அல்லது விற்பனை செய்தலோ அல்லது விற்பனைக்காக வழங்குதலோ ஆகாது; அத்துடன்

(ஆ) ஏதேனும் பொது இடத்தின் அல்லது ஏதேனும் பொதுமக்கள் கூடும் இடத்தில் இவ்வொழுங்குவிதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பாதுகாப்புத் தலைக்கவசம் ஒன்றை அணிதல் ஆகாது.

7. இவ்வொழுங்குவிதிகள் பின்வரும் அத்தகைய கடமைகள் அல்லது பணிகளைப் பொறுப்பேற்கும் நேரத்தில் பின்வருவோர் தொடர்பில் ஏற்புடையதாதல் ஆகாது.

(அ) போர் குற்றங்களில் ஈடுபட்டுள்ள பொலிசு அலுவலர் ஒருவர்;

(ஆ) தேசிய பந்தோபஸ்தின் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள இலங்கைத் தரைப்படை, இலங்கை கடற்படை அல்லது இலங்கை விமானப்படையின் உறுப்பினர் ஒருவர்; அல்லது

(இ) ஆபத்துக்கு உட்பட்ட கடமைகளில் ஈடுபடுவதற்கு தொழிலுக்கு அமர்த்தப்பட்ட ஆளொருவர்;

(ஈ) ஏதேனும் வீதியில் மோட்டார் சைக்கிள் ஓட்டப் பந்தயம் ஒன்றில் மோட்டார் சைக்கிளை ஓடுவதற்கு அல்லது அத்தகைய ஓட்டப் பந்தயம் ஒன்றிற்காக ஒத்திகை பார்ப்பதற்கு உட்கருதுகின்ற ஆளொருவர்.

8. 1991 ஆம் ஆண்டு சனவரி 11 ஆந் தேதிய 644/26 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1990 ஆம் ஆண்டு மோட்டார் வாகன (அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பான தலைக்கவசங்கள்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017 ஆம் ஆண்டு

பெப்புருவரி 23 ஆந் தேதிய 2007/39 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மோட்டார் வாகன (பாதுகாப்பு தலைக்கவசங்கள்) ஒழுங்குவிதிகள் என்பன அதன்கீழ் ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

9. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி -

"நாடிப் பாதுகாப்பு" என்பது, முகத்தின் கீழ்ப்பகுதியை மூடுகின்ற பாதுகாப்பு தலைக்கவசத்தின் நீட்சி அல்லது ஓட்டின் இணைப்பு எனப் பொருள்படும்.

"நாடிப் பட்டி" என்பது, அணிபவரினது நாடிக்கு அல்லது கீழ்த்தாடைக்கு கீழ் செல்லுகின்றதும் மோதலில் அணிபவருடைய தலையில் பாதுகாப்பான தலைக்கவசத்தை வைத்திருப்பதற்கு உட்கருதப்படுகின்றதுமான 20மிமீ அகலத்திற்கு குறையாதிருக்கின்றதுமான பட்டி ஒன்று எனப் பொருள்படும்; அத்துடன்


"சுற்றுப்புறப் பார்வை" என்பது, (எஸ்எல்எஸ் 517 : 1994) வாகனப் பாவனையாளர்களுக்காக பாதுகாப்பு தலைக்கவசங்களுக்கான இலங்கை நியம அளவுக்குறிப்பீடுகளில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இதற்கான அட்டவணையுடன் இசைந்தொழுகுதலும் வேண்டும்.

"வீதி" என்பது, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.


"கவச முகத்தகடு" என்பது, கண்களுக்குமேலே நீடிக்கின்றதும் பாதுகாப்பான தலைக்கவசத்தை அணிபவரின் முகத்தின் பாகத்தை அல்லது முகம் முழுவதையும் மூடுகின்றதுமான ஒரு ஒளிபுகவிடுகின்ற பாதுகாப்பான திரை எனப் பொருள்படும்.

**அட்டவணை**

(ஒழுங்குவிதிகள் 5)




இலக்கம் 1 : சுற்றுப்புறப் பார்வை பிராந்தியங்கள் – பக்கப்பார்வை




*இலக்கம் 2 : சுற்றுப்புறப் பார்வை பிராந்தியங்கள் - மேல் பார்வை*

குறிப்பு :

1. *இலக்கங்கள் 1 மற்றும் 2 இல் காட்டப்பட்டவாறு பார்வைக் கோணங்கள் $7^0$, $45^0$ மற்றும் $105^0$ ஆக இருத்தல் வேண்டும்.*

2. *LK கோடு நெட்டாங்கு சார்ந்த செங்குத்து தளத்தில் தலைவடிவத்தின் முன்பக்க மேற்பரப்பில் இருக்கின்ற புள்ளிகள் $K1$ மற்றும் $K2$ என்பது தலைவடிவ மேற்பரப்பிலும் நெட்டாங்கு செங்குத்து தளத்தின் இருபக்கங்களில் 31mm இலும் இருக்கின்றன.*

3. *புள்ளிகள் $L1$ மற்றும் $L2$ முறையே இடது மற்றும் வலது கண்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.*

EOG *07 - 0034*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*